**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 178/2025**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 4 |
| Name (திரு/திருமதி) | : பூங்காவனம் |
| Father's Name/ Husband's Name | : பெரியசாமி |
| Village & Taluk | : விநாயகபுரம் |
| Calling | : விவசாயம் |
| Age | : 42 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026**

1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. ஆஜர் எதிரி மற்றும் 2ம் எதிரியை எனக்கு தெரியும். அவர்கள் என் உறவினர்கள் ஆவார்கள். அ.சா.1 முனியம்மாள் எனது மாமியார் ஆவார். அ.சா.2 பெரியசாமி எனது கணவர் ஆவார். கடந்த 2023ம் வருடம் ஒரு நாள் இரவு 08.00 மணியளவில் நானும், எனது மாமியார் மற்றும் எனது கணவர் ஆகியோர்கள் எங்கள் வீட்டில் இருந்தபோது கும்பலாக வந்த அடையாளம் தெரியாத நபர்கள் வந்து எங்களை ஆபாசமாக பேசி தாக்கிவிட்டனர். எதிரிகள் எங்களை தாக்கவில்லை. அதில் எங்களுக்கு காயம் ஏற்பட்டது. காயமடைந்த நாங்கள் அனைவரும் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். காவலர்கள் என்னை விசாரித்தனர்.**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகள் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். கடந்த 29.06.2023 ம் தேதி இரவு 8.00 மணிக்கு நானும், எனது கணவர் மற்றும் மாமியார் ஆகியோர்கள் எங்கள் வீட்டில் இருந்தோம் என்றால் சரிதான். அப்போது

முன் விரோதத்தில் ஆஜர் எதிரிகள் எங்களை தகாத வார்த்தையால் திட்டி, இரும்பு ராடாலும், தடியாலும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் இல்லை. மேற்படி சம்பவத்தை காவலர்கள் விசாரணையில் கூறிவிட்டு தற்போது, நானும் எதிரிகளும் தற்போது சமாதானமாகிவிட்டபடியால் அவர்களை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/– B. Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 178/2025**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 5 |
| Name (திரு/திருமதி) | : ரமேஷ் |
| Father's Name/ Husband's Name | : ராமசாமி |
| Village & Taluk | : செஞ்சி |
| Calling | : சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Age | : 56 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026**

1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் தற்போது சத்தியமங்கலம் கா.நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். கூடுதல் பொறுப்பாக அவலூர்பேட்டை காவல் நிலையத்தின் உதவி ஆய்வளராக பணி செய்து வருகிறேன். கடந்த 2023ம் வரும் அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் திரு. சிவக்குமார் என்பவர் பணிமாறுதல் பெற்று சென்றுவிட்டதாலும், அவரின் கையொப்பம் தெரியும் என்பதாலும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 30.06.2023 அன்று 13.00 மணிக்கு அவலூர்பேட்டை கா.நிலையத்தில் உதவி ஆய்வாளராக திரு. சிவக்குமார் என்பவர் பணியில் இருந்த போது அ.சா.1 முனியம்மாள் என்பவர் நியைம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 238/2023 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(ii) மற்றும் 4 of TNPHW Act-ன் கீழ் மு.த.அ பதிவு செய்துள்ளார். **மேற்படி புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை வரிசை முறையே அ.சா.2 மற்றும் அசாஆ-3-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் அன்றைய தினமே 14.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் குமரன் மற்றும் விக்ரம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 4 மற்றும் 5ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் முனியம்மாள், பெரியசாமி, பூங்காவனம், தனிகைமலை, ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் 1ம் எதிரி செல்வராஜ் என்பவரை கடந்த 16.07.2023 அன்று இரவு 08.30 மணிக்கு எதிரியின் வீட்டின் அருகே கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மற்ற எதிரிகள் முன் பிணை சென்றுவிட்ட படியால் அவர்களை கைது செய்ய இயலவில்லை.

பின்பு அவர் இவ்வழக்கில் காயமடைந்த அ.சா.1(முனியம்மாள்)– என்பவருக்கு வெளிக்காயம் ஏற்படாததாலும், அவர் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்பதும் அவரது விசாரணையில் தெரிய வந்ததால் சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை மூலம் வழக்கின் சட்டப்பிரிவுகளான 294(பி), 323, 324, 506(ii) மற்றும் 4 of TNPHW Act – வை 294(பி), 352, 506(ii) இதச மற்றும் 4 of TNPHW Act என பிரிவு மாற்றம் செய்துள்ளார். **மேற்படி சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.6– ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 352, 506(ii) இதச மற்றும் 4 of TNPHW Act –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இவ்வழக்கின் சாட்சிகளை எனக்கு தெரியாது என்றாலும், அவர்களை நான் இவ்வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய் புகாரை புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், நான் புலன் விசாரணை அதிகாரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/– B. Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.